Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 29-3-1985 வெள்ளிக்கிழமை (பங்குனி 16 றஜப்-6) முழக்கம் 53

## நாற்பது பூஸா இளைஞர்கள் இன்று காலை யாழ் வருவர்

பூஸாவிலிருந்து மேலும் நாற்பது வட பகுதித் தமிழ் இளைஞர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். நேற்றுக் காலை கொழும்பிலிருந்து விசேஷ பஸ் மூலம் புறப்பட்ட இவர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள். நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து இந்த பஸ் கொழும்புக்கு அனுப்பப்பட்டது. யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் செய்த ஏற்பாட்டுக்கு அமைய, செயலக உத்தியோகத்தரான திரு. ஈ. கே. குமரையா கொழும்பு அனுப்பப்பட்டார். நேற்று பிற்பகல் 2-00 மணியளவில் வவுனியா வந்து சேர்ந்த நாற்பது இளைஞர்களும் இன்று காலை இங்கு வந்து சேருவர். பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக பஸ் அனுப்பப்பட்ட விபரம் ரகசியமாகப் பேணப்பட்டது

# வவுனியாவில் கருத்தடை சிகிச்சை செய்வதற்கு டாக்டர்கள் மறுப்பு; பயமுறுத்தலே காரணம்!

(வவுனியா)

வவுனியாவில் ஆண்கள், பெண்களுக்கான கருத்தடை சிகிச்சைகள் முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சத்திரசிகிச்சையைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட டாக்டர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளமையே இதற்குக் காரணமாகும்.

ஆஸ்பத்திரிகளில் கருத்தடைச் சத்திர சிகிச்சை செய்யும் டாக்டர்கள், சிலரால் பயமுறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே அவர்கள் சிகிச்சை செய்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாக அண்மையில் வவுனியா கச்சேரியில் இது தொடர்பாக நடைபெற்ற மாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளாக கருத்தடைச் சத்திர சிகிச்சையில் வவுனியா மாவட்டமே முதலிடத்தை வகித்து வந்தது. இங்கு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டவர்களில் தொண்ணூறு வீதமானவர்களும் இந்திய வம்சாவழித் தமிழராவர்.

கடந்த இரு மாதங்களாக வவுனியா மாவட்டத்தில் கருத்தடைச் சத்திர சிகிச்சை நடைபெறவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

★ கொழும்பு சந்திப்பில் உச்சி மாநாடு பற்றி பேசப்படவில்லை

# ஜே. ஆர் ராஜீவ் உச்சி மாநாடு நிச்சயமில்லை!

# ஹமீத் ஏப்ரலில் டில்லி செல்வார்

## இலங்கை அகதிகள், தமிழ்நாட்டு மீனவர் பற்றியும் ரமேஷ் பண்டாரி இங்கு பேசினார்

(புதுடில்லி)

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக உச்சி மாநாடு நடைபெறுவது நிச்சயமில்லை என்று புதுடில்லி வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. அதே வேளையில் திரு. பண்டாரி ஆரம்பித்து வைத்துள்ள பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீத் அடுத்த மாதம் புதுடில்லிக்கு விஜயம் செய்வார் என்றும் நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரமேஷ் பண்டாரி இலங்கையில் மூன்று நாட்கள் தங்கியிருந்தபோது இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையே உச்சி மாநாடு நடத்துவது பற்றி எவருடனும் பேச்சு நடத்தவில்லை என்று தெரிவித்த இந்திய அதிகாரபூர்வ வட்டாரங்கள், "ஜனாதிபதி ஜெயவர்த்தன புதுடில்லி வருவாரானால் அவரை வரவேற்போம்" என்றும் தெரிவித்தன.

புதுடில்லியில் ஏப்ரல் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் அணிசேரா இயக்கத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அமைச்சர் ஹமீத் இனப்பிரச்சினை தொடர்பாக

—6ஆம் பக்கம் பார்க்க

இன்று பெருமாள் கோவிலில்

## அமிர் சுகம்பெற சர்வமத ஆலயங்களிலும் வழிபாடு

தமிழர் தலைவரும், கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் பூரண சுகம் பெற வேண்டி சர்வமத வழிபாட்டுத்தலங்களிலும் தொடர்ச்சியாக பூஜை, வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று பாஷையூர் அர்ச் அந்தோனியார் ஆலயத்திலும், யாழ்ப்பாணம் கோவில் வீதி அருள் ஆச்சிரமம் தேவாலயத்திலும் சிறப்புப் பூஜைகள் இடம்பெற்றன.

இன்று காலை ஒன்பது மணிக்கு வண்ணை ஸ்ரீ வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் விசேஷ

—6-ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம்கள் பிரார்த்தனை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்த

—6-ஆம் பக்கம் பார்க்க

## டீசல் இல்லாததால் யாழ் பஸ் சேவை ரத்தாகலாம்!

யாழ்ப்பாணத்தில் டீசல் இல்லாததால் வட பிரதேச போக்குவரத்துச் சபையின் குடாநாட்டு பஸ் சேவைகள் இன்று முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலை உருவாகியுள்ளது.

அனுராதபுரத்திலிருந்து கடந்த நான்கு நாட்களாக யாழ்ப்பாணத்துக்கு டீசல் வராததாலேயே இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கணேவத்தைக்கருகில் ரயில் ஒன்று தடம்புரண்டதால் இப்பாதை சீர்குலைந்துள்ளது. இதனால் கொழும்பு-அனுராத

—6ஆம் பக்கம் பார்க்க

பிரதமர் ராஜீவிடம் தமிழ் எம். பீக்கள் மகஜர்

## ஈழத்தமிழர்கள் அச்சமின்றி வாழும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும்!

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி ஒரு முடிவு காண்பதற்கு பாரதம் உறுதியாகச் செயற்பட வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தியிடம் வலியுறுத்தியுள்ளனர் தமிழ் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள்

இந்திய பாராளுமன்றத்தின் தமிழ்நாட்டுஉறுப்பினர்கள், அரசியல் தலைவர்களின் குழுவொன்று புதுடில்லியில் வைத்து ராஜீவ் காந்தியை நேரடியாகச் சந்தித்து இப்பிரச்சினை பற்றி கலந்துரையாடியதை அடுத்து மகஜரொன்றையும் கையளித்தது

இலங்கையில் தமிழ் மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க இந்தியா தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்த இக்குழுவினர் தேவை ஏற்படுமானால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசை வற்

—6ஆம் பக்கம் பார்க்க

## இணுவிலில் வீடு தீக்கிரை

(மானிப்பாய்)

இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற சோதனையொன்றை அடுத்து ஒரு வீடு தீக்கிரையாக்கப்பட்டது. வாகனங்களில் சிராக வந்தவர்களால் இவ்வேலை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது வீட்டிலிருந்த பெண்ணொருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## தமிழகத்தில் இலங்கைப் பிரச்சினைக்காக தி. மு. க. இன்று முதல் ஒரு மாதம் மறியல்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை மீது மத்திய அரசின் கவனத்தை அதிகரிக்கச் செய்வதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் இன்று முதல் ஒரு மாத காலத்துக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மறியல் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக சென்னையிலுள்ள இலங்கை பிரதித் தூதுவரின் அலுவலகத்துக்கு முன்னால் இன்று மறியல் போராட்டம் ஆரம்பித்துவைக்கப்படும் என்று தி மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

மறியல் போராட்டத்தை தாமே தலைமை தாங்கி நடத்தப் போவதாகத் தெரிவித்த கலைஞர், இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் அட்டூழியங்களை தமிழக மக்கள் கூட அறிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்தார்,

இலங்கையில் நடைபெறும் சம்பவங்களைப்பார்க்கும்போது தமிழினம் விரைவில் முற்றாகவே ஒழிக்கப்பட்டு விடலாம் எனவும் கலைஞர் அச்சம் தெரிவித்தார்.

கழகப் பொதுச் செயலா

—6ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீமாவோ அறிக்கை

இலங்கையின் இன்றைய அரசியல் நிலை, அரசாங்கத்தின் போக்கு, இடைத் தேர்தல்களில் தமது கட்சி போட்டி

— 6ஆம் பக்கம் பார்க்க

## திருநெல்வேலியில் ஹர்த்தால் வெற்றி!

மூன்று இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டதைக் கண்டித்தும் அவர்களை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு கோரியும் திருநெல்வேலியில் நேற்று நடாத்தப்பட்ட கடையடைப்பு பூரண வெற்றியளித்தது.

திருநெல்வேலிச் சந்தியிலுள்ள சகல கடைகளும் நேற்று முழுநாளும் மூடப்பட்டிருந்

—6ஆம் பக்கம் பார்க்க

# மாணவர் தமது கல்வித் தரத்தினைக் குறைக்காது வாழவேண்டும்

(அச்சுவேலி)

"தமிழ் இனத்தின் முது பெரும் சொத்து கல்வி. இதனை இன்றைய இளம் தலைமுறையினர் சரியாக பயன்படுத்தி முன்னேறுவதற்கு நாம் எல்லோரும் இயன்றளவு உதவி புரிய வேண்டும் அதே நேரத்தில் மாணவர்களும் குழப்பமான சூழ்நிலையை பயன்படுத்தி தமது கல்வித் தரத்தை குறைத்துக் கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடாமல் தமது கல்வித் தரத்தையும்; தமிழ் இனத்தின் தரத்தையும் வளர்த்துக்கொள்வதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்."

கொக்குவில் பல் தொழில் நுட்ப நிறுவன வணிக மாணவர் மன்ற செயலாளர் திரு. பி ரகுநாதன் இவ்வாறு கூறினார்.

தைமாதம் 9ம் திகதி ஆவரங்கால் பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதத்தால்பாதிப்புக்கு உள்ளாகிய ஆவரங்கால மகாஜன வித்தியாலய மாணவர்களிற்கு கொப்பி, பேனை முதலிய உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திரு. எஸ் சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு ரகுநாதன் தொடர்ந்து உரையாற்றும் போது.

தமிழ் மக்கள் இன்று எதிர்பாராதவிதமாக தமது சொந்த இடங்களில் அகதிகளாக வாழ வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவுவதற்காக எமது வணிக மாணவர்மன்றம் தீர்மானித்து பொதுமக்களிடம் நிதி சேகரித்தோம். இந்த நிதியில் ஒரு பகுதியை திக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆவரங்காலில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் உதவ சந்தர்ப்பம் கிடைத்தது இது நாம் எதிர்பாராத ஒன்று. எதிர்காலத்திலும் எம்மால் இயன்றளவு உதவி செய்வதற்கு முயற்சிப்போம் எனக்கூறினார்.

ஆசிரியர். எஸ். கணபதிப்பிள்ளை நன்றி கூறுகையில், ஆவரங்கால் பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதத்தால் பாதிப்புக்கு உள்ளாகிய மக்களிற்கும் மாணவர்களிற்கும் உதவுவதற்கு கொக்குவில் பல் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் திரு எஸ். இராசேந்திராவும், உதவி அதிபர் திரு. வி பாக்கியநாதரும் மாணவர்களும் முன்வந்தது பாராட்டவேண்டியது. இந்த உதவிக்கு ஆவரங்கால் பகுதி மக்களும் இப்பாடசாலை மாணவர்களும் எப்பொழுதும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் எனக் கூறினார்.

பல ஆயிரம் ரூபா பெறுமதியான கொப்பிகள், பேனைகள் என்பன மாணவர்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டது. வணிக மாணவர் மன்ற உறுப்பினர்கள் செல்வி பி. சாரதா செல்வி எஸ் சாந்தா ஆகியோரும் உரையாற்றினர்.




✱ பாஷையூர் ஆரோக்கியநாதர் தங்கம் தம்பதிகளின் புதல்வன் சுதர்ஷன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ் ஈச்சைமொட்டை செபஸ்தியன் லலிதா தம்பதிகளின் மகள் சோபாசுதாசினி தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ் ஸ்ரான்லிக் கல்லூரி வீதி சண்முகராஜா செலவராணி தம்பதிகளின் மகள் டயசிறி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ கச்சேரி நீக்கிளஸ்லேனைச் சேர்ந்த திருநாதன் சோதிமலர் தம்பதிகளின் மகன் பிரதீபன் தனது இரண்டாவது பிறந்த நாளைக் இன்று கொண்டாடுகிறார்.

✱ யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி வீதி, சண்முகராஜா செலவராணி தம்பதிகளின் மகள் சியாமளா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## ஆசிய பசிபிக் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர் மாணவர் அடிக்கடி சந்திக்க வாய்ப்பு

### யாழ் துணைவேந்தர் 'வித்தி' தகவல்

புதுடில்லியில் நடைபெற்ற ஆசிய பசிபிக் பிராந்திய நாடுகளின் பல்கலைக்கழகங்களினது துணைவேந்தர்களின மாநாட்டில் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

வருங்காலங்களில் இந்தப் பிராந்தியங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் விரிவுரையாளர்கள், மாணவர்களை அடிக்கடி சந்திக்கவைக்க ஒழுங்குகள் செய்ய வேண்டும் என்று இம் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

புதுடில்லியிலிருந்து நாடு திரும்பும் வழியில் தஞ்சாவூர் சென்று, தமிழ்ப் பல்கலைக்கழக ஆளுனர் சபைக் கூட்டத்திலும் பேராசிரியர் வித்தியானந்தன் கலந்து கொண்டார்.

## இன்று குருபூஜைதினம்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருநாதர், நல்லைக்குருமணி, ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளது குருபூஜை ஆதீனத்தில் இன்று வெள்ளிக்கிழமை நிகழவுள்ளது ஆண்டுக்கொருக்கால் வரும் இப்புனித திருவாதிரைத் தினத்திலே ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் பால், பக்தியும் அன்பும் பாராட்டிய அன்பர்கள் திரளாக வருகை தந்து நினைவு கூரிவார்கள் விசேட அபிஷேகம், பூஜைகள், மகேசுரபூஜை ஆகியன நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தீர்க்கதரிசனமாக அவர்கள் மனதில் உதித்த எண்ணங்கள், இலட்சியங்கள் ஆதீனத்தில் நிறைவேறி வருவதைக் காண்கிறோம். அவர்கள் வகுத்தருளிய இருபது அம்சத்திட்டங்களை ஆராயுமிடத்து இவ்வுண்மை தெள்ளெனத் துலங்கும், திருமுறைகளை முற்றோதல் புராணபடனம், கூட்டுப்பிரார்த்தனை, பண்ணிசை வகுப்புகள் ஆதியன ஆதீனத்தில் நடைபெறுவதைச் சற்றுச் சிந்திப்போமாயின், இக்கட்டான இக்கால கட்டத்தில் இவை பெரும் சாதனைகள் வெறும் புகழ்ச்சியல்ல, நிகழ்ச்சிகளை நிறைவுறச் செய்ய சுயநலமிலாப் பெரும் முயற்சி எடுக்கும் அன்பர்களைப் பாராட்டுகிறோம்.

தான் தொடங்காற்றல் திறனும். தமிழிலும் சமயத்திலும் அசைவில நம்பிக்கையும்வினை செய்தற்கண் மனவெழுச்சிமிகுதியும், வினைத்திட்பமும், தன்னல மிலாப்பணியும் அருமையுடைத்தென்று அசாவாது பெருமுயற்சிகளை எடுக்கும் பெற்றிமையும் கொண்டிருந்த எமது குருநாதர் நெறி நின்று நாமும் வழ முயல்வோமாக. இன்பமே சூழ்க.

ஓம் சாந்தி. சாந்தி, சாந்தி.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்

## கட்டுவன்புலத்தில் ஆங்கில வகுப்புகள் வார இறுதியில்

யாழ் கட்டுவன்புலம் மகா வித்தியாலத்தில் கல்வி அமைச்சின அங்கீகாரத்துடன் யாழ் கல்வித் திணைக்களத்தினால் வார இறுதி ஆங்கில வகுப்புக்கள் நடாத்த அனுமதி கிடைத்துள்ளது.

பாடசாலையை விட்டு வெளியேறிய சகல பழைய மாணவர்களும், அப்பகுதியைச் சேர்ந்தவர்களும் மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்றி நன்மை பெறமுடியும். பயிற்சி முடிவில கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தயடையும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு.க. இராசதுரை அவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சியினால பழைய மாணவர்களுக்கென கல்வி அமைச்சின புறவழிக் கல்விக்கிளையினால் நடாத்தப்படும் தொழில நுட்பப பாட நெறிகளும் மேற்படுத்தப்படவுள்ளன. பெண்களுக்கான உடை அமைத்தலும் தையலும் நெறியினையும், ஆண்களுக்கான தச்சுவேலைப் பயிற்சியும், வானொலிப் பொறியியல் பயிற்சியும், வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

### கூட்டம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பகுதியிலுள்ள திணைக்கள. அரசாங்க ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகஸ்தர்களுக்கான பகுதி நாள் கூட்டம் மேற்படி அரசாங்க அதிபர் பணிமனையில் வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் திணைக்களங்கள், மற்றும் அரசாங்க ஸ்தாபனங்களின் செயல் திட்டங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டு மேற்படி ஊழியர்களுக்கு ஏனைய திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### மாபெரும் ஏலவிற்பனை

இடம்:– யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுச் சந்தைக் கட்டடம் (நல்லூர் சந்தை)

காலம்:– ஆடிமாதம 30-ம திகதி சனிக்கிழமையும் 31-ம திகதி ஞாயற்றுக்கிழமையும் தினசரி காலை 9 மணி தொடக்கம் பொருட்கள பல விதமான வைகள பொருட்களைப் பார்வையிடுவதற்கும விபரங்களுக்கும தொடர்பு கொள்ளுங்கள்!–

ஏலவிற்பனை நிலையம், கோப்பாய்.

### வயல் விற்பனைக்கு

களிப்பிட்டி. கண்டாவளை, மடுக்கரை வீதியில 10 ஏக்கர் வயல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:– க. தியாகராசா, 'மதிவாசம்' புலோலி தெற்கு, புலோலி.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# பல் வேறு பணிகளுக்குமாக நிதியுதவிகள்கிடைக்கின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் கால் நடை வளர்ப்பு, கைப்பணி வேலைகள், சுற்றாடலில் கிடைக்கும் உணவுப்பொருட்களை பதப்படுத்தல் போன்ற கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக மேற்கொள்ள படும் நடவடிக்கைகளுக்கு 1985 ம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ஒரு வேலைத்திட்டத்துக்கு ரூபா பத்தாயிரம் என்ற அடிப்படையில் நிதி வழங்கப்படும். பளை, பூநகரி, கிளிநொச்சி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதே வேளை அகில உலக தரிசன நிறுவனம் பிரபந்தனூறு படித்த வாலிபர் திட்டத்துலுள்ள சுமார் இருபத்தெட்டு குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்புக்காக பதினைந்தாயிரம் ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளது

மேலும், உமையாள்புரம் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினூடாக அங்குள்ள இருபது குடும்பங்களுக்கு கால்நடை வளர்ப்புக்காகவும் சுமார் பதினேழு குடும்பங்களுக்கு கோழி வளர்ப்பிற்காகவும் பதினாறாயிரம் ரூபா கொடுத்துதவியுள்ளது. அகில உலக தரிசன நிறுவனத்தால் ஏற்கனவே கனகாம்பிகைகுளம், வட்டக்கச்சி கிழக்கு சிவநகர் ஆகிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நிதியுதவி பெற்று இயங்கி வருகின்றன என்பதும குறிப்பிடத்தக்கது.

### 40 வருட சேவையின் பின் ஓய்வு பெற்றார்

(சுழிபுரம்)

சண்டிலிப்பாய் மகாவித்தியாலய அதிபர் பிரமஸ்ரீ கா. வைத்தியநாதஐயர் கடந்த மாதம் முதல் இளைப்பாறியுள்ளார் நாற்பது வருடங்களாக ஆசிரியத்துறையில் ஈடுபட்ட இவர் ஏழாலை மகா வித்தியாலயம் இணுவில் சைவமகஜன மானிப்பாய் மெமோரியல கல்லூரி ஆகியவற்றின் முன்னைநாள் அதிபராகவும் இருந்தவர். இவரின் சேவையைப் பாராட்டி பிரிவுபசாரம் ஒன்று நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### சுதேச விளையாட்டு

(நல்லூர்)

"சர்வதேச இளைஞர் ஆண்டையொட்டி யாழ். பரி. யோவான் கல்லூரி இன்ரறக் கழகம் கல்லூரி மைதானத்தில் சுதேச விளையாட்டு விழா வொன்றை நடாத்தியது.

### பொதுக் கூட்டம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் மகாஜன வித்தியாலய "பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம்" ஏப்ரல் மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. வி. தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.


## உங்கள் காசோலைகளை பணமாக மாற்ற...

உங்கள் அன்றாட வாழ்க்கையில் காசோலைகளைப் பணமாக்கலும் பாதுகாப்பாகப் பேணுதலும் தவிர்க்க முடியாத தேவைகளாகும்! சிரமற்ற சேவைகளால் அவதிப்படும் உங்கள் உதவிக்கு தமிழர் நிதியம் நாணய முறித்திட்டத்தினை இனமேற நாடுங்கள்!

### நாணய முறித் திட்டம்

உங்கள் பணம அல்லது அரசாங்க, கூட்டுத்தாபன, ஒய்வூதியக் காசோலைகளைச் செலுத்தி பணத்திற்கு ஈடான நாணய முறிகளாக மாற்றிக் கொள்ளுங்கள்!

### உங்கள் உடனடிப் பணத் தேவைக்கு

தமிழர் நிதியத்திலேயே இந்நாணய முறிகளை உடனடியாகவோ பின்னரோ பணமாக்கலாம் அல்லது வேறு எவருடனும்மேற பரிவர்த்தனை செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☏ 22437

# தமிழர் தலைவன்



## பூரண நலம்பெற
# பிரார்த்திக்கின்றோம்!

**இன்று காலை 9-00 மணிக்கு**
**வண்ணை ஸ்ரீ வெங்கடேச பெருமாள் தேவஸ்தானத்தில்**
**தலைவர் நலம்வேண்டி விசேட ஆராதனை நடாத்தப்பெறுகிறது**

குளோபல் - யாழ்ப்பாணம்
வீ. கே. இராசரத்தினம், ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.
சாயி ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
நல்லூரான் மில்ஸ் - நல்லூர்
எவரெஸ்ட் இன்டஸ்றீஸ், கச்சேரி நல்லூர் வீதி - யாழ்ப்பாணம்

# தந்தை செல்வாவை நினைவு கூருவோம் அவர் கனவுகளை நனவாக்குவோம்!

"'உலகத் தமிழர் நெஞ்சத்தில் அணையாத தீபம்'' என கலைஞர் மு கருணாநிதி தந்தை செல்வா மறைவையொட்டி வெளியிட்ட அஞ்சலியில் குறிப்பிட்டிருந்தார். ஆறு கோடி தமிழர்களின் முதல்வராக விளங்கிய கலைஞரின் கருத்து தந்தை செல்வா ஈழத் தமிழர்களுக்காற்றிய நிலையான பணியினைத் தெளிவாக எடுத்துக் காட்டிற்று

ஈழத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா எம்மை விட்டுப்பிரிந்து ஏழு ஆண்டுகள் கிளிட்டன. முப்பது ஆண்டுகளாக ஈழத் தமிழர்களை வழிநடத்திய பெருந்தலைவன் மறைந்தபின் தமிழ் இனம் அனுபவித்துவரும் இன்னல்கள் குறிப்பிடமுடியாதன.

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒரு தனித் தேசிய இனம் என்ற தத்துவத்தை முதன் முதல் எடுத்துக் கூறி அதை நிலைநாட்டிய பெருமை தந்தை செல்வநாயகம் அவர்களையே சாரும். இந்த நாட்டில் நாம் சிறுபான்மையோர், சிறுபான்மைச் சமூகம் என்ற பேச்செல்லாம் மறைந்து, தமிழ்த் தேசிய இனம் ஒரு தனியாய இனம் என்று தந்தை அவர்கள் துணிந்து முதன் முதல் எடுத்துக் கூறினர்.

## தமிழர் தனித் தேசிய இனம்

இன்று இலங்கையில் உள்ள பல அரசியல் கட்சிகள், அரசியல் இயக்கங்கள் இந்த நிலையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. தீவிரவாத பூடது சார் இயக்கங்கள சில 77-ம் ஆண்டிலேயே இந்த நிலையை ஏற்றுக்கொண்டு இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஒரு தனித் தேசிய இனம். அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொண்டது. புரட்சிவாத கம்யூனிஸ்ட் கட்சி இயக்கங்கள் தமிழ் மக்கள் ஒரு தனித் தேசிய இனம் மாத்திரமல்ல அவர்கள் ஒரு நசுக்கப்படும் தேசிய இனம் இந்த வகையில் அவர்களுடைய விடுதலைக்காகப் போராடுவது முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள்; மாக்ஸிய தத்துவத்தை ஏற்றுக் கொண்டவர் அத்தனை பேரதும் கடமை என்று எடுத்துக்கூறின.

ஈழத் தமிழ் மக்கள் தங்களது பாரம்பரியமான பூமியை பேணிக்காத்து அதில் சுதந்திர மக்களாக வாழ வேண்டுமென்பது தந்தை அவர்கள் கண்ட கனவு. இலங்கை முழுவதும் பரந்து பட்டு அடிமைகளாக வாழ்வதிலும் பார்க்க எம்முன்னோர்கள் ஆண்ட பூமியில் நாம் உரிமையுள்ள மக்களாக அதை எமது சொந்த மண்ணாக ஆண்டு கொண்டு வாழ்வது அத்தியாவசியம என்று தந்தை அவர்கள் எமக்கு அறிவுறுத்தினர். அந்த அடிப்படையில் தமது அரசியல் வாழ்வில் அவர் எத்தனையோ ஒப்பந்தம் எழுதினர் எத்தனையோ நடவடிக்கைகளை மேற்கொண்டார். எத்தனையோ பேச்சு வார்த்தைகளை நடத்தினர். ஆனல் சிங்களத் தலைவர்களுடைய ஏமாற்றுத் தன்மையினுல் அவர் எழுதிய ஒப்பந்தங்களோ பேச்சு வார்த்தைகளோ பலன்அளிக்கத் தவறிவிட்டன. அதனுல்தான் சிங்களத்தலைவர்களோடோ மக்களோடோ, இணைந்து வாழ்வது இனிச் சாத்தியமில்லை என்ற முடிவுக்கு 1976ம் ஆண்டு எம்மை அழைத்துச் சென்றர் அந்த ஆண்டில் பண்ணுகத்தில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடைவதற்கு இன்று தமிழ் மக்கள் பலவகையான போராட்டங்களை நடத்திக் கொண்டு வருகின்றனர்.

## நிலையான போராட்டம்

தமிழ் மக்களின் போராட்டம் நிலையானது என்பதனுல் இன்று எமது பிரச்சினை சாவதேசப் பிரச்சினையாகிவிட்டது. சர்வதேச நாடுகள் தமிழர் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கையால் முடிவு காண முடியாது என்றும் அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகின்றன. தந்தை செல்வா முன் வைத்த கோரிக்கைக்கு சர்வதேசரீதியான ஆதரவு திரண்டுவரும் அதே வேளையில் இத் தீர்வுக்கு 1958இல் ஏற்பட்ட உண்டா செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தன்னுதிக்கம் கொண்ட வடகிழ் இணைந்த பிரதேச ஆட்சியை தலைவர் திரு. எஸ் தொண்டமான் வலியுறுத்தி வருகின்றர்' இருபத்தி ஏழு ஆண்டுகளிற்கு பின்னரும் தந்தை செல்வா தீர்க்கதரிசனத்துடன் மேற்கொண்ட ஒப்பந்தம் அவரின் அரசியல் சான்றினை எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் விடுதலை பெறுவதற்காக பணியாற்றும் ஒரு நிறுவனத்தை உருவாக்க வேண்டும் எனும் தனிநோக்கத்துடனேயே நாங்கள் இங்கு கூடியிருக்கின்றோம். இப்போதிருக்கும் நிலையில் நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திர தமிழ் அரசை நிறுவுவது இன்றியமையாதது. நமது காலத்தில் நமது கண்முன்னே எமது இலட்சியம் நிறைவேறுது போனுலும் பிற்கால சந்ததிக்காவது அந்தப்பேறு கிடைக்கட்டும்,

## தந்தையின் தீர்க்கதரிசனம்

1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த போது தொடக்க விழாவில் தந்தை செல்வா கூறிய கருத்துக்களே இன்று தீர்க்கதரிசனமாக அமைந்துள்ளது, தொடர்ந்து தந்தை செல்வா குறிப்பிட்ட கருத்துக்கள் 9ம் 10ம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வடக்கிலுள்ள நிலப்பரப்பில் தமிழர் ஆட்சி தொடங்கியது. தெற்கேயுள்ள சிங்களப்பகுதியில் தனியாட்சி நடைபெற்றது. சில சமயங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட அரசுகள் தென்னிலங்கையில் இருந்தன. காலம் மாறினும் சிங்கள அரசும் தமிழ் அரசும் தனித்தனியாக நெடுகாலம் தொடர்ந்தன ஐரோப்பியர் வந்து முதலில் தமிழ் அரசைக் குலைத்தனர். பின் சிங்கள அரசைக் குலைத்தனர். பல நூற்றாண்டுகளாக பிரிட்டிஷ்காரரால் இணைக்கப்பட்ட இரு நாடுகளும் அவர்கள் நிர்வாகத் தேவைக்காகவே இணைக்கப்பட்டன. இந்த இருநாடுகளும் இயற்கையாக ஒன்றிணையவில்லை. தீர்க்கதரிசனமாக அன்றே பெரியவர் இப்படி கூறினர். சிந்தித்துப்பாருங்கள் அவர் இலட்சியத்தை அடைய நாம் உறுதி பூணுவதே அவர் நினைவாக மேற்கொள்ளும் சபதமாகும்.

## அரியாலையில் பிரசவ விடுதி

(அரியாலை)

அரியாலையில் பிரசவ விடுதி ஒன்று அமைக்கும் முயற்சி நடைபெற்றுவருகிறது. இவ் விடுதியை அமைப்பதற்கு ஏற்றவசதியான வாடகைக்கு எடுக்கக்கூடிய கட்டடம் கிடைத்ததும் இது அமைக்கப்படுமென அறியப்படுகிறது. கலாநிதி திரு. எஸ். மோகனதாஸ் இம்முயற்சியில் ஈடுபட்டு வருகிறர். இது குறித்து யாழ். மாநகர சபை ஆணையாளருடனும் அவர் உரையாடியிருக்கிறர்.

## மக்கள் அனைவரும் இணைந்து குழுக்களாக சேர வேண்டும்

(ஊர்காவற்றுறை)

"இன்றைய அரசியல் பொருளாதார பிரச்சினைகளால் ஒவ்வொரு தமிழ்ப் பகுதிகளும் 'பல்வேறு' பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது அரச நிறுவனங்களெல்லாம் தமது கடமைகளைச் சிறப்பாக செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. இந்நிலையில் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். இந்த நிர்ப்பந்தத்தின் விளைவாக மக்கள் அனைவரும் ஒரு குழுவாக செயற்பட வேண்டிய அவசிய தேவை காரணமாக தோற்றுவிக்கப்பட்டதே பிரஜைகள் குழு''

இவ்வாறு பிரஜைகள் குழு அமைக்கப்பட்டதற்கான காரணம், அதன் முன் உள்ள பணிகள், நிர்வாக அமைப்பு சம்பந்தமாக பொது மக்கள் அறியக்கூடிய விதத்தில் ஊர்காவற்றுறை பிரஜைகள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக பி. பாக்கியநாதனும் பொதுச் செயலாளராக எஸ். பி. ஐயரும் கடைமையாற்றி வருகின்றனர்.

## சாவகச்சேரி நீதிமன்று ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் கடந்த திங்கட்கிழமை முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. சுமார் இருபத்திஐந்து வழக்குகள் அழைக்கப்பட்டுத் தவணைபோடப்பட்டன. மாவட்ட நீதிபதி திரு. கே. பாலவடிவேல் வழக்குகளை வேறு திகதிக்கு ஒத்திவைத்தார்.

சாவகச்சேரி மாவட்ட பொலீஸ் நீதிமன்றக் கட்டடங்கள் இனந்தெரியாத நபர்களினுல் தீயிட்டுக் கொளுத்திச் சேதப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இவை நீண்டகாலமாக இயங்கமுடியாது இருந்தன. இதைத்தொடர்ந்து ஜீவனும்ச வழக்குகள் உட்பட சில வழக்குகளைத் தொடர்ந்துள்ள முறைப்பாட்டுக்காரர் பெரிதும் கஷ்டமடைந்தனர்.

## முற்பணம் 500 ரூபா

(ஏழாலை)

சகல ஆசிரியர்களுக்கும் சம்பள முற்பணமாக ரூபா 500 இம் மாத வேதனத்துடன் வழங்கப்பட்டுள்ளது. எனினும் முதலாம், இரண்டாம், மூன்ருந்தர அதிபர்களுக்கு இவ்வாறு முற்பணம் வழங்கப்படவில்லை. அதிபர்களும், ஆசிரியர்களும் இம்மாதம் பெற்ற கணிசமான வேதனத்தைப் பணமாகப் பெறுவதில் பெருஞ் சிரமமடைகிறர்கள். மாதம் முடியும்போதுதான் இவர்கள் சமர்ப்பித்துள்ள காசோலைகளுக்கான பணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சுன்னுகம் கூட்டுறவுச் சங்கம் வாகனங்களின்றி கஷ்டம்

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு வாகனங்களையும் உடனடியாகத் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்க வலி. தெற்குக் கிளை கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக இவ் இயக்கத்தின் செயற்குழுக்கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய வெளியிடப்பட்ட அறிக்கையில், சுன்னுகம், ஏழாலை, உடுவில் பகுதிகளுக்கு உணவு விநியோகத்தை சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே மேற்கொள்கின்றது.

இன்றைய போக்குவரத்து நெருக்கடிகள் நிறைந்த காலகட்டத்தில் மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவைகளை ஈடுசெய்வது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே, உணவுப் பொருள் விநியோகம், எரிபொருள் விநியோகம் ஆகியவை மக்களுக்கும், இப்பகுதி விவசாயிகளுக்கும் இன்றியமையாதவை.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இந்த வாகனங்கள் மக்களின் தேவைக்காகப் பயன்படுவது கட்டாயத் தேவையென்று மனித உரிமைகள் இயக்கத்தின் வெகுஜன இயக்கத்தின் வலி தெற்குக் கிளை தனது செயற்குழுத் தீர்மானம் மூலம் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்த வாகனக் கடத்தலோடு சம்பந்தப்பட்டவர்கள் தயவு செய்து இவற்றைத் திருப்பிக் கொடுக்கும்படி வெகுஜன இயக்கம் கேட்டுக் கொள்கின்றது என்று தெரிவித்துள்ளது.

## காணவில்லை

கீழ்க்காணும் விபரங்களையுடைய இருவரையும், ஏழாலை கிழக்கு. ஏழாலை. லக்ஷ்மி வாசத்திலிருந்து 24-3-85 ஞாயிறு மாலை 3 30 மணியிலிருந்து காணவில்லை.

### த. ஜீவகன்



வயது 11, உயரம்: 4 அடி 5 அங்குலம், பொது நிறமானவர், கட்டையாக வெட்டப்பட்ட தலைமயிர், கடைசியாக நீலக் காற்சட்டையும், மண்ணிறச் சேட்டும் அணிந்திருந்தார்.

### செ. ஜோன்

வயது 14, உயரம்: 4 அடி, நிறம் கறுப்பு, கட்டையாக வெட்டப்பட்ட தலைமயிர், கடைசியாக நீல நிறசதுரமிட்ட சாரமும் மண்ணிற ரீசேட்டும் அணிந்திருந்தார்

தகவல் தெரிவிப்பவர்க்கு சன்மானம் வழங்கப்படும்.

விலாசம்:-

க. வைத்திலிங்கம்,
லக்ஷ்மி வாசம்,
ஏழாலை கிழக்கு.
ஏழாலை.

## ஆப்தீன்

(தையல் உலகின் நவீன முன்னோடிகள்)

யாழ்ப்பாணம் பெரியகடை 5ம் இலக்கத்தில் இயங்கி வந்த எமது நிறுவனம் தற்போது 24/1, பெரிய கடை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தற்போது இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.




24/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உதய சிந்தனை

மூடனுடைய பேச்சு விவாதத்துக்குள் நுழையும்: அவனுடைய நாக்கு அடிபட அறைகூவியழைக்கும் அவனுடைய வாயே அவனுக்கு நாசம். உதடுகளே அவனுடைய உயிருக்கு மரணவலை.

—பைபிள்

37, கண்டி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

# இதய ஒலி

29 3 85 வெள்ளிக்கிழமை (இரத்தாக்ஷி பங்குனி 16)

## வாய்க்கால் இன்றி நீர் பாய்ச்சலாமா?

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி தனது மூன்றுநாள் இலங்கை விஜயத்தை ஆடம்பரமின்றி அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலம் முடித்துவிட்டு புதுடில்லி திரும்பிவிட்டார்.

அவரது வருகைக்கு முன்னரே ஆருடம் தெரிவிக்கப்பட்ட முக்கியமான விடயம், அவரது விஜயம் முடிவடைந்த பின்னர் உத்தியோகபூர்வ அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது,

முற்றுப்பெறாத, முடிவு காணாது, முறிந்துபோன பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது முதலாவது காரியம்.

அதற்கு ஏதுவாக சகல தரப்பினரும் வன்செயல்களைக் கைவிடுவது அடுத்த விஷயம்.

ஜனாதிபதி, பிரதமர், சிங்கள, முஸ்லிம் அமைச்சர்கள், தமிழ் அமைச்சர் தொண்டமான், பௌத்த மகாசங்கத்தினர், சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா வரையான அனைவரையும் சந்தித்து, அவர்கள் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்ட ரமேஷ் பண்டாரி, பாரதப் பிரதமரிடம் தமது அறிக்கையை சமர்ப்பிப்பார்.

அன்னை இந்திரா காந்தியின் அயரா முயற்சியினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாடு, அவரது மறைவை அடுத்து அரைகுறையாக இடைநிறுத்தம் கண்டது.

இப்போது அதே பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடர்வதற்கான ஏற்பாடுகளையே தனயன் ராஜீவ் காந்தி மேற்கொண்டுள்ளார்.

ஆனால் ஒரு சிறு வித்தியாசம், அப்போது, மண்டபத்துள் மேசையைச் சுற்றி அரசியல் தலைவர்கள் பேசிக்கொண்டிருந்த போது, வெளியே துப்பாக்கிச் சன்னங்களும், குண்டு மாரிகளும் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தன.

இப்போது, இருபகுதியினரும் சில காலத்துக்கு ஆயுதங்களை வீசிவிட்டு ஆக்கபூர்வமான அரசியல் தீர்வுகாணும் பேச்சுவார்த்தைக்கான முயற்சி எடுக்கப்படுகின்றது

வெளியே அனர்த்தங்களும், அழிவுமில்லாத சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றார் ராஜீவ்.

பேச்சுவார்த்தைக்கு தீவிரவாத இளைஞர் தலைவர்களையும் அழைக்கவேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் தேசிய பந்தோபஸ்து அமைச்சர். அதற்குமுன்னர் அவர்கள் ஆயுதங்களை வீசவேண்டும் என்றும் அவர் அருளுரை வழங்கியுள்ளார்.

பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் சகல வன்செயல்களும் ஒழிக்கப்பட வேண்டும் என்றவேண்டுகோளை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றோம்.

வன்செயலால் அநியாயமாக உயிரிழப்பவர்கள் அப்பாவிப் பொதுமக்களே என்பதால், இந்த வேண்டுகோளை நாம் முழுமையாகவே ஆதரிக்கின்றோம்.

நிறுத்தப்படாத வான் ஒன்றுக்காக. போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணம் செய்த ஆரண்டு பெண்களும், இருவயோதிபர்களும் அநியாயமாக பண்ணையில் வைத்துக் கொல்லப்பட்டனரே! இதுயார் செய்த வன்செயல்.

குடும்பப் பெண்களும், வயோதிபர்களும் பயங்கரவாதிகளா?

விண்ணிலிருந்து மண்நோக்கி வந்த துப்பாக்கிக் குண்டுக்கு நேற்று முன்தினம் இரையான செல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் மரணத்துக்கு யார் காரணம்? இது யார் செய்த வன்செயல்?

இவைகளைப் பார்க்கும் போது வன்செயல்கள் எந்தத் திசையிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றதென்பது பகிரங்கரகசியமாகின்றது.

எனவே சுற்றிவளைத்து, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், கடத்தல்காரர்கள், கொள்ளையர்கள் என்று தமிழ் இளைஞர்களுக்குப் பட்டம் சூட்டி அவர்களை ஆயுதங்களைக் கீழே போடுங்கள் என்று அறைகூவல் விடுப்பதில் பயனில்லை.

அரச பயங்கரவாதத்தினால் அப்பாவித்தமிழ் மக்களின் வாழ்க்கை அல்லோலகல்லோலப் படுகின்றது என்பதை அரசு முதலில் உணரவேண்டும்.

தமிழ்ப் பகுதிகளிலிருந்து ராணுவத்தை வாபஸ் பெறுவதற்கு முதலுரிமை கொடுத்துச் செயற்படுத்தவேண்டும்.

பின்னர் தீவிரவாத இளைஞர் தலைவர்களுடன் பேச்சை ஆரம்பிக்கலாம்.

வாய்க்கால் வெட்டியபின் நீர்பாய்ச்சுவதே சுலபம்;

---

ஓயாத நிலையில் அதிவேகத்தில் வளைகுடாப்போர்

# ஈராக்குக்கு ஈரானின் பதிலடி விமானத் தாக்குதல் நீடிப்பு!

(லண்டன்)

ஈராக்குக்கும், ஈரானுக்கும் இடையிலான வளைகுடாப் போர் சற்றும் ஓயாத நிலையில் உச்சக் கட்ட வேகத்துடன் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாக நேற்று அறிவிக்கப்பட்ட தகவல்கள் தெரிவித்தன. தெஹ்ரானில் ஈராக்கிய விமானங்கள் இரண்டு தடவைகள் நடத்திய அதிவேகத் தாக்குதல்களில் பத்துப் பேர் உயிரிழந்தனர் என்றும் இதேவேளை பாக்தாத்தில் ஈரானிய விமானங்கள் ஆறு முறை நடத்திய அசுரவேகத் தாக்குதல்களில் பலத்த சேதங்கள் விளைந்தன என்றும் அறிவிக்கப்படுகிறது

இதற்கிடையில் வளைகுடாவில் இரண்டு எண்ணெய்க் கப்பல்களையும் விமானங்களையும் ஈராக் தாக்கியதற்குப் பதிலடியாகத் தான் பலமான ஏவுகணைத்தாக்குதல்களை நடத்தியதாக ஈரான் தனது போர் முனை அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

குடியிருப்புகள் மீதான இரு நாடுகளினதும் தாக்குதல்களால் இருநாடுகளிலும் உயிர்ச்சேதங்கள் மட்டுமன்றி பல பாரிய கட்டடங்கள் கூட நாசமாக்கப்பட்டுள்ளன என்றும் நேற்றைய தகவல்கள் தெரிவித்தன.

## பாக். பிரதமருக்கு ராஜீவின் பாராட்டு

(புதுடில்லி)

புதிய பாகிஸ்தான் பிரதம மந்திரி மொகத்கான் ஜுனியோவுக்குப் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி பாராட்டுச் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

## பிரிட்டன் அரசு வெளிநாட்டு டாக்டர் சேவைக்குத் தடை

(லண்டன்)

பிரிட்டனில் வெளிநாட்டைச் சேர்ந்த பல சிகிச்சை டாக்டர்கள், மற்றும் சில துறை டாக்டர்கள் விடயத்தில் பிரிட்டிஷ் அரசு முழு அளவில் தடை விதித்துள்ளது. வெளிநாட்டு டாக்டர்கள் இனி குறைந்தளவு வரவே அனுமதிக்கப்படுவர்.

பிரிட்டனில் வெளிநாட்டு டாக்டர்கள் ஆக்கிரமிப்பினால் இருபது வீத உள்நாட்டு டாக்டர்கள் வேலையின்றித் தவிப்பதாக பிரிட்டன் வைத்தியர் சங்கம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்ததனையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கூடுதல் வரி விதிப்பு

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரி அரசு 1985-86ம் வருடத்துக்கான பட்ஜெட்டில் மூன்று கோடியே தொண்ணூற்று இலட்சம் ரூபாவுக்குக் கூடுதல் வரி விதிக்க ஏற்பாடு செய்துள்ளது.

## ரங்கா நியமனம்

(புதுடில்லி)

லோகசபையின் இந்திரா காங்கிரஸ் தலைவராக பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி திரு ரங்காவை நியமித்துள்ளார்.

அரசு அதிகாரி அறிவிப்பு

## மந்திரி சண்முகம் வீட்டில் சோதனை ஏதும் நிகழவில்லை

(சென்னை)

தமிழ்நாடு ஊராட்சித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகத்தின் இல்லத்திலோ அவரது தனயன் செல்வத்தின் இல்லத்திலோ அந்நியச் செலாவணி தொடர்பான எவ்விதச் சோதனையும் நடத்தப்படவில்லை என்று மேற்படி இலாகா துணை இயக்குநர் அகமத்ஷா நேற்றுச் சென்னையில் வெளியிட்ட அதிகாரபூர்வ செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

திரு சண்முகத்தின் இல்லத்தில் இதுவிடயமாகச் சோதனை நடத்தப்பட்டு தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்பட்டதாக சட்டசபையில் திராவிட முன்னேற்றக்கழகமும் ஏனைய எதிர்க்கட்சிகளும் பெரும் பிரச்சினை கிளப்பின.

இதனையொட்டி சபையில் தி மு க குழுத் தலைவர் பேராசிரியர் கே. அன்பழகன் துணைத் தலைவர் நாஞ்சில் மனோகரன் உட்பட எதிர்க் கட்சியினர் வெளிநடப்பும் செய்திருந்தனர்.

சிம்லாவில் பாதுகாப்பு மந்திரி தகவல்

## பாரதக் கடற்படை நவீனமயமாவதில் அரசு கவனம்

(சிம்லா)

இந்துமாக்கடலில் நிலவும் பதற்றநிலை மற்றும் காரணங்களைக் கருத்திற் கொண்டு பாரதம் தனது கடற்படையை நவீனமயப்படுத்துவதில் முழுக் கவனத்தையும் செலுத்தும் என்று பாதுகாப்பு மந்திரி திரு. பி. வி. நரசிம்மராவ் சிம்லாவில் நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

நாட்டின் பந்தோபஸ்துக்கான சகல நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது என்றும் மந்திரி சொன்னார்.

## மது போதை: விபத்தில் எழுவர் பலி

(சென்னை)

காரியாபட்டி என்ற இடத்தில் நடைபெற்ற லொறி விபத்து ஒன்றில் ஆறு பெண்கள் உட்பட எழுவர் மரணமாகினர். முப்பத்து நான்கு பேர் காயமடைந்தனர்;

லொறிச் சாரதி சம்பவவேளை மதுபோதையில் இருந்ததாகவும் கிளினர் தலைமறைவாகிவிட்டதாகவும் லொறியில் இருபத்தாறு ஆண்களும் பதினைந்து பெண்களும் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பஞ்சாப் நிலை குறித்து எஸ். பி. சவான்

## நாட்டின் ஒற்றுமை குலையாத வகையில்தான் சமரஸம்

(புதுடில்லி)

நாட்டின் ஒற்றுமையை விட்டுக் கொடுக்காத வகையிலேயே பஞ்சாப் பிரச்சினை குறித்து அகாலிதள் தலைவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தும். நாட்டின் ஒற்றுமைக்குக் குந்தகம் விளையும் விதத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது என்று ராஜ்யசபையில் பேசுகையில் உள்துறை மந்திரி திரு. எஸ். பி. சவான் கூறினார்.

"அகாலிதள் தலைவர்களை சகல சீக்கிய மக்களினதும் தலைவர்கள் என்று அரசு ஏற்றுக் கொள்ளாது" என்று குறிப்பிட்ட மந்திரி, திருமதி இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டபின் நிகழ்ந்த கலவரங்கள் தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை பற்றிக் குறிப்பிடுகையில் 'அதற்கு ஒட்டுமொத்தத் தீர்வுகாணவே அரசு விரும்புகிறது' என்றார்.

இதேவேளை, அகாலிதள் தலைவர்கள் தம் பிடிவாத மனப்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று மாஜி ஜம்முகாஷ்மீர் முதல் அமைச்சர் பாரூக் அப்துல்லா கூறியுள்ளார்.

ராமேஸ்வரம் மண்டபத்தில்

## வாஷிங்டன் அறிக்கை

(வாஷிங்டன்)

வளைகுடாப்போரில் ஈராக் இரசாயனச் சேர்வை கலந்த போராயுதங்களையுப் பாவித்து வருவதாக வாஷிங்டன் கூறுகிறது.

மதுரைக்குக் கிடைத்த தகவல்

## வெடிகுண்டு வைத்திருந்த இரண்டு இலங்கையர் கைது

(மதுரை)

சட்டவிரோத வெடிகுண்டுகள் வைத்திருந்ததாக இரு இலங்கைப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

மதுரைக்குக் கிடைத்த தகவலின்படி இவ்விருவரும் நீதித் துறைக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

29. 3. 1985 வெள்ளிக்கிழமை

# ஈழமுரசு


விமான டிக்கட்டுகளை மலிவாகப் பெறுவதற்கும்

★ பிரான்ஸ் ★ ஜேர்மனி ★ ஹொலண்ட்

மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான

பிரயாண ஒழுங்குகளைச் செய்வதற்கும்

யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்:

TET

ரான்ஸ் யூரோ ரவல்ஸ்

தொடர்பு: S. K. மகேந்திரராஜா

இல 6, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23831


# முல்லைத்தீவு பண்ணைகளில் பாதுகாப்பான குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தை அண்மித்துள்ள இரண்டு முக்கிய பண்ணை'களில் மீண்டும் குடியேற்றம் நடைபெற்றுள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

டொலர் பண்ணையில் சுமார் நானூறு பேர் மீண்டும் குடியேற்றப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு ராணுவ பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

இரவையும் பகல்போலக் காட்சியளிக்கச் செய்யும் வகையில் இப்பகுதிக்கு மின் வெளிச்சம் அளிக்கப்பட்டுள்ளது. பெண்கள் எவரும் இங்கு வரவில்லையென்றும், விவசாயப் பண்ணைகளில் வேலை செய்வதற்காக ஆண்கள் மட்டுமே குடியேற்றப் படடுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் இப்பண்ணைகளில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களை அடுத்து இங்கிருந்த மிகுதிப் பேர் வெளியேறியது தெரிந்ததே.

## கல்விக் கந்தோருக்கு

## படையெடுத்துச் சென்ற நவாலி பாடசாலை பெற்றோர்

(சித்தன்கேணி)

நவாலி சென். பீற்றர்ஸ் த. க. பாடசாலையில் கல்வி கற்கும் சைவ மாணவர்களது பெற்றோர் சுமார் நூறு பேர் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு நேற்றுப் பிற்பகல் படையெடுத்து கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையைச் சந்தித்து தமது பாடசாலை நிலைமைகள் குறித்து கவலை தெரிவித்ததோடு மாணவர் கல்வி பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர்.

கல்விப் பணிப்பாளரின் காரியாலயத்தில் சந்தித்து முறைப்பாடு செய்துகொண்ட பெற்றோருக்கு ஆறுதல் கூறிய கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை தாம் அடுத்த மாதம் 9ம், 10ம் திகதிகளில பாடசாலைக்கு நேரில் வருகை தந்து கிறிஸ்தவ, சைவப் பெற்றோர்களாகிய இரு தரப்பினரையும் அழைத்து பாடசாலையில் வைத்து விசாரணை நடாத்தி மாணவர்களது கல்வி பாதிக்காதவாறு நடவடிக்கை எடுப்பதாகக் கூறி அனுப்பி வைத்தார்.

இப்பாடசாலை ஒரு கிறிஸ்தவ பாடசாலையாக இருந்தாலும், சைவ மாணவர்களே அதிகமாகக் கற்று வருகின்றனர். இப்பாடசாலைக்கு அதிபராக இருக்கும் மரியாமபிள்ளை என்பவா இங்கு சரஸ்வதி பூசை நடாத்த அனுமதி வழங்கிய காலத்திலிருந்து இரு தரப்பினருக்குமிடையே பல மாதங்களாகப் பிரச்சினைகள் நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வெளியேற்றம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணிப் பண்ணையிலுள்ள பந்தோபஸ்து படையினரின் கெடுபிடிகளுக்கு அஞ்சி வீடு வாசல்களையும் கால்நடைகளையும் பயிர் கொடிகளையும் விட்டு பெரிய குளம், ஓதியமலை பகுதி மக்கள் அகதுசளாக நெடுங்கேணி நட்டாங்கண்டல், தச்சடம்பன் பகுதிகளில் தஞ்சம் புகுகிறார்கள்.

## கடத்தலின்பின் விடுதலையானர்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டானில் ஆயுதப் படையினருக்கு வெளியில் இருந்து பொருட்களை வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தும் மற்றும் சிறுசிறு வேலைகளையும் அவர்களுக்குச் செய்தும் வந்த தமிழ் நபர் ஒருவர் ஒட்டுசுட்டான் தபால்கந்தோருக்கருகில் வைத்து சிலதினங்களுக்கு முன் இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்றால் கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## டீசல் இல்லாததால்..

—1ஆம் பக்கத் தொடர்

புரம் ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் அனுரதபுரத்துக்கு கூட டீசல அனுப்பப்படவில்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இன்று முதலாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகின்ற வேளையில் போக்குவரத்துச் சீர்குலைவதனால் மாணவர்கள் பெரிதும கஷ்டமடைய வேண்டி ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் நேற்று கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதுடன், உடனடியாக வேறு இடங்களிலிருந்து டீசலைப் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

## அமிர் சுகம்பெற..

—1-ஆம் பக்கத் தொடர்

பூஜை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. யாழ்நகரின் பல்வேறு அமைப்புகளும் சேர்ந்து இதனை ஒழுங்கு செய்துள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்கு தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூஜை வழிபாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

## ஸ்ரீமாவோ..

—1ஆம் பக்கத் தொடர்

யிடாததற்கான காரணங்கள் ஆகியவைகளை விளக்கி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டார்


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

### கந்தையா கண்ணம்மா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14-6-1915 | 30- -1984 |

அணையா விளக்காய் அன்புச்சுடராய் எங்கள் உள்ளங்களில் வீற்றிருக்கும் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்!

உங்கள் நினைவால் துயருறும்

அருமை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுவிஸ்லாந்து பேரப்பிள்ளைகள்

தகவல்:- க. திருச்செல்வம்,
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை


## திருநெல்வேலியில்...

—1ஆம் பக்கத் தொடர்

தன. வழக்கமாக கலகலப்பாகக் காணப்படும் திருநெல்வேலிச் சந்தையும் நேற்று வெறிச்சோடி சோபையிழந்து காணப்பட்டது.

மேற்படி இளைஞர்களைக் கடத்தியதாகக் கூறப்படும்விடுதலைக் கழகத்தைத் தாக்கி பெருமளவு சுவரொட்டிகள் இங்கு ஒட்டப்பட்டிருந்தன,

இரு தினங்களுக்கு முன்னர் இங்குள்ள அம்மன் ஆலயத்துக்கு முன்னால் ஆண்களும் பெண்களும் சேர்ந்து உண்ணாவிரதம் அனுஷ்டித்ததும் குறிப்பிடத்தக்கது

## ஜே ஆர். ராஜீவ்..

—1 ஆம் பக்கத் தொடர்

இந்திய வெளியுறவு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவார்.

இலங்கையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் திருப்தியளித்துள்ளதாக திரு பண்டாரி தெரிவித்ததாகவும் கருத்துவெளியிட்ட புதுடிலலி வட்டாரங்கள், இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் பிரச்சினை, தமிழக மீனவர்கள் தாக்குதல் சம்பவம் பற்றியும் இலங்கை அதிகாரிகளுடன் பேசியதாகவும் குறிப்பிட்டுக் கூறின.

## தமிழகத்தில்...

—1ஆம் பக்கத் தொடர்

ளர் திரு கே. அன்பழகன் மறியல் போராட்டம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் இப்போராட்டத்தில் அரசியல் கலப்பு எதுவும் இல்லை என்றும் இலங்கையில் நடைபெறுவதை உலகின் கண்களுக்கு எடுத்துக் காட்டவே நடத்தப்படுகிறது எனவும் விளக்கினார்.

★ சிங்கப்பூர் சம்பவம்

# மதுவை விடமுடியவில்லை; பதவி துறந்தார் ஜனாதிபதி!

சிங்கப்பூர் ஜனாதிபதி திரு. தேவன்நாயர் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

மது அருந்துவது காரணமாகத் தான் உயர் பதவியில் இருந்துகொண்டு கடமையைச்செய்ய முடியாது இருப்பதாகத் தெரிவித்து இவர் தனது ராஜினாமாவை அறிவித்துள்ளார்.

தற்போது ஜனாதிபதி தேவன்நாயர் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்,

# உணவு முத்திரை பெறுமதி நவம்பரில் இரட்டிப்பாகும்

உணவு முத்திரையின் பெறுமதி அடுதத நவம்பர் மாதம் முதல் இரட்டிப்பாக அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது ஒருகுடும்பத்துக்கு மாதமொன்றுக்கு நூற்றி இருபத்தைந்து ரூபாபெறுமதியான உணவு முத்திரை வழங்கப்படுகிறது இது நவம்பர்முதல்இருநூற்றைமபது ரூபாவாக அதிகரிக்கபபடும்.

உணவுமுத்திரைபெறுவோர் தொகையையும்குறைபபதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக சேவைகள அமைச்சர் திரு. அசோகா கருணாரத்தின அறிவித்துள்ளார்.

தற்போது ஏழுலட்சம் பேர் உணவு முத்திரை பெறுகின்றனர்.

## கலாசார நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்அவையின் ''கலாசார நாள்'' நாளை சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது விழாவில் மலர் வெளியீடு கவிதா நிகழ்ச்சி, 'மண் சுமந்த மேனியர்' நாடகம், 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' பாடல்கள், நாட்டியம், குறும் படக்காட்சி ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்,

## கிளிநொச்சியில் இரு சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நிறுத்தி வைககப் பட்டிருநத மினிவான் ஒன்று இனந்தெரியாத இளைஞர்களினால் கொள்ளையடிததுச் செல்லப்பட்டது.

துப்பாக்கிகள் சகிதம் நீதிமன்ற வளவுக்குள் புகுந்த சுமார் பத்து வாலிபர்கள் காவலாளியை பயமுறுத்தி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வழக்குத் தடயப் பொருளான மினிவான் ஒன்றை எடுத்துச் சென்றனர். இந்த வான் இயங்க முடியாத நிலையில் இருந்ததால் தள்ளிக் கொண்டு சென்றதாக காவலாளி கூறினார்,

இது இவ்வாறிருக்க அடுத்தடுத்து நடந்த கொள்ளைச் சம்பவங்கள் காரணமாக இயங்க முடியாத நிலையில் பூட்டிக் கிடந்த கிளிநொச்சி கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் கதவை உடைத்து மிஞ்சியிருந்த பொருட்களையும் இனம் தெரியாத சிலர் களவாடிச் சென்றுள்ளனர்.

## ஈழத் தமிழர்..

—1ஆம் பக்கத் தொடர்

புறத்தும் விடயத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட தயங்கக் கூடாதென்றும் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்தனர்

## ஜனாதிபதி தம்பதி இன்று பயணம்

ஜனாதிபதி ஜெயவர்த்தன தமது பாரியார் சகிதம் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று பாகிஸ்தான் புறப்படுகின்றார்.

## பாகிஸ்தானுக்கு யானைக்குட்டி

இன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன இலங்கையின் சார்பில் பாகிஸ்தான் மக்களுக்கு யானைக்குட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்வார். பாகிஸ்தான் தேர்தலுக்குப் பின்பு அங்கு செல்லும் முதல் வெளிநாட்டுத் தலைவர் இலங்கை ஜனாதிபதியே.

## அம்மன் உற்சவம்

(அரியாலை)

அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகா மாரி அம்மன் ஆலயத்தில் கடந்த 2ம் திகதி தொடக்கம் வருடாந்த பங்குனி அபிஷேக பூர்த்திவிழா நடைபெற்று வருகிறது. இம்மாதம் 31ந் திகதி முடிவடையும் இவ்விழா அன்று காலை 9-30 மணிக்குச் சங்காபிஷேகம் நடைபெறும் ஆண்டு தோறும் நடைபெறும் வெளி வீதித் திருஉலா நாட்டு நிலைமை கருதி நடைபெறமாட்டாது. உள் வீதியில் மட்டுமே நடைபெறும்.

## அகதிகளுக்கு உதவி

சங்கானை பிரஜைகள் குழு முல்லைத்தீவு அகதிகளுக்காகச் சங்கானை மக்களிடம் சேகரித்த பணத்தில் முதற்கட்டமாக ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறைக் கடந்த பதினெட்டாம் திகதி முல்லைத்தீவு பதில் அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளது.

## முஸ்லிம்கள்...

—1-ஆம் பக்கத் தொடர்

லிங்கம் சுகயீனமுற்றதை அறிந்த யாழ். முஸ்லிம் மக்கள் கவலையும், அதிர்ச்சியுமடைந்துள்ளனர். இவர் பூரண சுகமடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்தித்து யாழ். முஸ்லிம் மக்கள் சார்பாக இஸ்லாமிய மக்கள் பாதுகாப்பு அமைப்பு விசேட மதவழிபாட்டு நிகழ்ச்சியை வெள்ளியன்று ஒழுங்கு செய்துள்ளது.


''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 29-3 1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி; 23336